செய்தார்கள், நீங்கள் செய்யவில்லை என்றுதான் பேசினார். அதற்குமேலே அவர் என்ன குற்றச்சாட்டு சொல்கிறார் என்றால் "F.I.R.-ல் பெயர் இருப்பதால் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இல்லையென்றால் அவராவது முன் ஜாமீன் கேட்டிருக்க வேண்டும்" என்று சொன்னார். "என் பெயரை அநியாயமாகச் சேர்த்துவிட்டார்கள்; அரசாங்கம் பழி வாங்குகிறதோ, அதிகாரிகள் பழி வாங்குகிறார்களோ" என்று நீங்கள் சொல்லுங்கள். எனக்கு அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. நீங்கள் உறுப்பினர்கள் இரண்டு பேர்களோடும் விவாதம் பண்ணிக்கொண்டு இருக்காதீர்கள். நீங்கள் முதலமைச்சரிடம் இந்த வழக்கு விஷயமாக என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லி, உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** எனவே, இந்த அந்தோணிமுத்து தொழிலாளி கொலை வழக்கில் என்னுடைய பெயரைச் சேர்த்தது தவறானது, உண்மைக்கு மாறானது. இதை நான் முதலமைச்சரிடத்திலே நேரடியாக விளக்கியிருக்கிறேன். இந்த மாமன்றத்தின் மூலமாகவும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே F.I.R.-லிருந்து என் பெயர் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதை இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அத்தோடு கொத்தடிமை தொழிலாளர்கள் விடுதலைக்கும் அரசு ஏதாவது ஒரு விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும். 150 ரூபாய் கூலி கேட்டு போராடக்கூடிய தொழிலாளர்களுடைய பிரச்சினையிலேயும் முதலமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்கால கூட்டத்தொடர் குளிர் மயமாகவே ஆகிவிடக்கூடாது என்பதற்காக கம்பளி கேட்டதற்கு மாறாக சற்று சூடான விவாதம் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே நடைபெற்றிருக்கிறது. இருந்தாலும் இந்தச் சூடு இந்த அவையோடு நின்றுவிட வேண்டும். இதற்கு வெளியிலும் பரவிடக்கூடாது என்கின்ற ஆழ்ந்த அக்கறையோடு இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் தாமரைக்கனி, சந்தானம், கிருஷ்ணசாமி ஆகியோருடைய கருத்துக்களின் அடிப்படையில் அல்ல. அவை குறித்து சிலவற்றை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 நவம்பர் 25

முற்பகல் 11-25

முதலில், இந்த நெல்லை மாவட்டத்திலேயுள்ள மாஞ்சோலை தேயிலைத் தோட்டத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்பை வழங்க விரும்புகின்றேன். Bombay Burma Trading Corporation Ltd., என்ற நிறுவனம் 1929 ஆம் ஆண்டிலிருந்தே திருநெல்வேலி மாவட்டத்தில் மாஞ்சோலைப் பகுதியில் தேயிலைத் தோட்டத் தொழிலைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இந்தத் தொழிற்சாலையிலே ஆண்களும் பெண்களும் சேர்ந்து நிரந்தரமாக 1,631 பேரும், தற்காலிகமாக 714 பேரும் பணியாற்றி வருகின்றார்கள். இந்த 2,345 தொழிலாளர்களில் 1,190 தொழிலாளர்கள் INTUC., AITUC., தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. தொழிற் சங்கங்களிலே உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். தொழிலாளர்கள் பிரச்சினை தோன்றும்போதெல்லாம், மேற்கண்ட சங்கப் பிரதிநிதிகளை நிர்வாகம் அழைத்துப் பேசி, சுமுகமான சூழ்நிலையிலே இதுவரையிலே இயங்கி வந்தது. திடீரென்று கடந்த ஆகஸ்ட் திங்களில் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நிர்வாகத்திற்கு நீண்டகால குத்தகைக்கு விடப்பட்ட தேயிலைத் தோட்டத்தை அரசாங்கம் திரும்பப் பெற்று அங்கே பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பிரித்து வழங்க வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூபாய் 150 கூலியாகவும், அதற்குமேல் சில பணச் சலுகைகளையும் வழங்க வேண்டுமென்றும் ஏற்க முடியாத சில கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தைத் தொடங்கினார். 18-8-1998 அன்று சேரன்மாதேவி R.D.O. முன்னிலையிலேயும், 19-8-1998 அன்று திருநெல்வேலி D.R.O. முன்னிலையிலேயும், பேச்சுவார்த்தைகள் நடந்தன. 20-8-1998 அன்று டாக்டர் க. கிருஷ்ணசாமி தடையை மீறி மாஞ்சோலைப் பகுதிக்கு 300 நபர்களோடு சென்று கூட்டங்களை நடத்தியிருக்கிறார். 25-8-1998 மற்றும் 28-8-1998 ஆகிய தேதிகளில் மதுரையில் தொழிலாளர் நலத் துறை இணை ஆணையாளர் முன்னிலையில் நடந்த பேச்சுவார்த்தைக்கு, புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த தொழிற் சங்கம் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இல்லை என்றபோதிலும் அந்தக் கட்சியின் சார்பில் கிருஷ்ணகுமார் என்பவர் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டார். இந்தப் பேச்சுவார்த்தையின்போது வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொள்ளவும் ஊதிய உயர்வு குறித்து ஜனவரி 1999-இல் முடிவு செய்வது என்றும் அனைத்து தொழிற் சங்கங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் கலந்துகொண்டவரும் கையெழுத்து இட்டுள்ளார். ஆனால், அந்த ஒப்பந்தத்திற்கு மாறாக திரும்பவும் வேலைநிறுத்தம் என்று அறிவித்து, அதைத் தொடர அவர்கள் முடிவு செய்தார்கள்.

1998 நவம்பர் 25] [கலைஞர் மு. கருணாநிதி]

மாஞ்சோலை தேதியிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் நாள் கூலி 54 ரூபாய் 68 காசு. இந்த நாள் கூலியை நாளொன்றுக்கு 150 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கிருஷ்ணசாமி கூறுகிறார். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் தனிப்பட்ட ஒரு நிறுவனம் மாத்திரம் செய்ய இயலாது. இந்தக் கூலி, அகில இந்திய அளவில் தேயிலைத் தோட்ட நிர்வாகங்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை பேசி, ஒப்பந்தம் செய்து அதன் அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுவது ஆகும். தற்போது நடைமுறையிலே உள்ள ஒப்பந்தம் டிசம்பர் 1998 வரைதான் அமலிலே இருக்கும். இன்னும் 2 மாதங்கள் முடிந்து அவர்களுடைய கூலி ஒப்பந்தம் புதிதாக நிர்ணயிக்கப்படவுள்ளது. அவ்வாறு நிர்ணயிக்கும்போது, அதை ஏற்றுக்கொள்வதாக அந்த நிறுவனம் ஏற்கெனவே ஒத்துக்கொண்டுவிட்ட பிறகு போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் சொன்னார்கள், ஏதோ கொத்தடிமை முறை எல்லாம் அங்கே இருப்பதாக. 27-9-1998 அன்று வெளி வந்த 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் தொழிற் சங்கங்களின் தலைவர்களுடைய பேட்டி வெளியாகியிருக்கிறது.

" Leaders of various trade unions have said that the Mancholai B.B.T.C. Estate issue is politically motivated and not even a single case of bonded labour exists in the issue.

கொத்தடிமை என்ற நிலையே அங்கே இல்லை என்று சொல்லுகிறார்கள்.

Speaking to newsmen today, leaders of Anna Thozhil Sangam , National Estate Workers' Union affiliated to INTUC and AITUC said, for the past 70 years the workers had been leading a peaceful and happy life in the estate.

அதற்குப் பிறகுதான் கிருஷ்ணசாமி அங்கே போகிறார்.

Dr. Krishnasamy had given tall promises to workers, which nobody could fulfil, they added.

யூனியன் தலைவர்களே சொல்கிறார்கள் இந்தக் கருத்தை.

Dr. Krishnasamy had given tall promises to workers, which nobody could fulfil, they added.

They said the workers had good housing facility, power supply, six schools, hospital, police station, bus services and other facilities. If the factory was not opened immediately, the workers would be severely affected".

என்கின்ற அளவிற்கு யூனியனைச் சேர்ந்தவர்கள், மற்ற பல்வேறு யூனியன்களைச் சேர்ந்தவர்கள், நான் குறிப்பிட்டதைப்போல பெரும்பான்மையான தொழிலாளர்களைக் கொண்ட யூனியனைச் சேர்ந்தவர்கள் அங்கே கொத்தடிமை முறை அறவே இல்லையென்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-30*

இதற்கிடையிலேதான் கிருஷ்ணசாமி அவர்கள் அங்கே சென்று 150 ரூபாய் பெறுவதற்கான போராட்டத்தை அந்தத் தொழிலாளிகளிடத்திலே அறிவித்து, அவருடைய சங்கத்தைச் சேர்ந்தவரே கலந்துகொண்டபேச்சுவார்த்தைக் கூட்டத்திலே ஒப்புக் கொள்ளப்பட்டதை மீறி, மீண்டும் ஒரு போராட்டத்தை நடத்தியிருக்கிறார். இது என்ன நியாயம் என்று எனக்கே தெரியவில்லை. நான் கிருஷ்ணசாமி அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். இங்கே நம்முடைய தாமரைக்கனி, சந்தானம் இவர்கள் எல்லாம் குற்றஞ்சாட்டினார்கள் என்பதற்காகக் கோபப்பட்டுக்கொள்ளக்கூடாது. அவர்கள் பொதுவுடைமை என்றெல்லாம் சொன்னார்கள். மக்களுக்காகத்தான் தன்னுடைய கடமைகளை ஆற்றுவதாகச் சொன்னார். அதிலே யாருக்கும் கருத்துப் பாகுபாடு இல்லை. ஆற்றத்தான் வேண்டும். கிருஷ்ணசாமியைப் போன்ற வாலிபர்கள் ஆக்கபூர்வமான காரியங்களிலே ஈடுபடுவதை எல்லோரும், எல்லாக் கட்சிகளிலே உள்ளவர்களும் நிச்சயமாக விரும்பத்தான் செய்வார்கள். ஆனால், அவருக்கு ஒன்று சொல்லுகின்றேன். அப்படி, ஆக்கபூர்வமான காரியங்களிலே ஈடுபடும்போது, ஒரு பழமொழி உண்டு, "அகல உழுவதைவிட ஆழ உழுவது நல்லது" என்று. எனவே, ஒரு குறிப்பிட்ட இடத்திலே, அவரவர் சக்திக்கு ஏற்றபடி, அவர் வேண்டுமானால் தமிழ்நாடு முழுவதும் தனக்கு சக்தி இருப்பதாக எண்ணிக்கொண்டு பணியாற்றலாம். இருந்தாலும்கூட, ஆழ உழ கற்றுக்கொள்ள வேண்டும். கண்டதேவி தேரா, அங்கே செல்வேன்; கோயம்புத்தூரிலே ஆலயப் பிரவேசமா, அங்கே செல்வேன்; நெல்லையிலே மாஞ்சோலையா, அங்கே செல்வேன் என்று இப்படி அகல உழ ஆரம்பிப்பது நல்லதல்ல என்பதை அவருக்கு நான் உரிமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 3-9-1998 முதல் இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக அந்தப் பகுதியிலே பதற்றம் நிலவத் தொடங்கியது. 4-9-1998 அன்று மாஞ்சோலை, நாலுமுக்கு, ஊத்து ஆகிய இடங்களில் தொழிலாளர்கள் வன்முறையிலே ஈடுபட்டார்கள்.

அன்றே தொழிற்சாலை மூடப்பட்டது. 23-10-1998 அன்று தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படும் என்று 19-10-1998 அன்று நிர்வாகம் அறிவித்ததைத் தொடர்ந்து கிருஷ்ணசாமியும், அவருடைய ஆதரவாளர் கிருஷ்ணகாந்தும் அடிக்கடி மாஞ்சோலைக்குச் சென்று பாதிரியார் பால் ரத்தினசாமி என்பவரோடு கலந்து ஆலோசனை நடத்தினார்கள். 23-10-1998 அன்று 113 தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றார்கள். 25-10-1998 அன்று காலை மாஞ்சோலை எஸ்டேட்டில் வேலை செய்யும் அந்தோணிமுத்து என்ற தொழிலாளியை மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் ஜோஸ், சிங்கராயன் என்கிற மரியசிங்கராஜ், ஜெயபால், சாமுவேல், வேலுச்சாமி, சின்னச்சாமி, மணிவண்ணன், ராபர்ட் என்கிற தொழிலாளர்கள் அரிவாளாலும், கத்தியாலும் தாக்கியதில் அந்தோணிமுத்து என்ற அந்த வாலிபர், அதாவது வேலைக்குச் சென்றார் என்ற காரணத்திற்காக அவர் கொல்லப்பட்டு, சம்பவ இடத்திலேயே அவர் உயிர்விட்டார். இதுகுறித்து மாஞ்சோலை காவல் நிலையத்திலே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் 3, 4, 5, 6 ஆகியோர் 26-10-1998 அன்றும், இரண்டாவது எதிரி 27-10-1998 அன்றும் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. கைது செய்யப்பட்ட எதிரிகள் ஐவரும் நீதிமன்றக் காவலில் இருக்கிறார்கள். ஏழாவது எதிரி மணிவண்ணன் 11-11-1998 அன்றும், எட்டாவது எதிரி ராபர்ட் 16-11-1998 அன்றும், திருநெல்வேலி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சரண் அடைந்துள்ளார்கள். எதிரி-1 ஜோஸ் என்பவரைக் கைது செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

24-10-1998 அன்று கல்லிடைக்குறிச்சியில், கிருஷ்ணசாமி, கிருஷ்ணகாந்த், பாதிரியார் பால ரத்தினசாமி ஆகியோர் கொலை வழக்கின் எதிரிகள் எட்டு பேரைச் சந்தித்து மாஞ்சோலையிலே நிலவி வந்த சூழ்நிலை பற்றியும், நிர்வாகத்திற்கு ஆதரவாக உள்ள அந்தோணி முத்தை கொலை செய்வது குறித்தும் விவாதித்தார்கள் என்றும், இதுகுறித்து அந்தோணிமுத்துவின் மனைவி அந்தோணியம்மாள் கொடுத்த புகாரின்பேரில் இம்மூவரும் வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அந்தோணிமுத்துவின் கொலைக்கான சதியில் இம்மூவரது பங்கு குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. Investigation இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உடனடியாக ஏன் கைது செய்யவில்லை என்று தாமரைக்கனி அவர்களும், சந்தானம் அவர்களும் இங்கே கேட்டார்கள். சந்தானம் அவர்கள் இங்கே பேசும்போது திருவாரூர் இலக்கியம் ஒன்றைச் சொன்னார்கள். "மகன்

தவறு செய்தபோது அவனையே தேர்க்காலில் வைத்த மனுநீதிச் சோழன்" என்பதை, பூம்புகார், அதாவது சிலப்பதிகாரத்திலே வருகின்ற வரிகளை எடுத்துக்காட்டிச் சொன்னார்கள். அதைச் சொல்லியுங்கூட கண்ணகிக்கு அங்கே நீதி கிடைக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்குமுன்பே அப்படிப்பட்ட கண்ணகி வந்து வாதாடுகிற அந்தக் கொலு மண்டபத்திலேதான் நெடுஞ்செழியப் பாண்டியன் அவசரப்பட்டு நீதி வழங்கி, நாடு இழந்து, மதுரையே தீக்கு இரையாகிற அளவுக்குச் சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவேதான், நெடுஞ்செழியனைப்போல கருணாநிதி அவசரப்பட மாட்டான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் சந்தானம் அவர்களுக்கு எடுத்துக் கூறி - பாண்டியனைச் சொல்கிறேன் - எடுத்து எடுத்துக் கூறி, விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; விசாரணையிலே உண்மை வருமேயானால் யாரும் தப்ப முடியாது என்பதை மாத்திரம் தெரிவித்து அமைகின்றேன்.

*முற்பகல் 11-35*

## 4. அறிவிப்பு

**எடுத்துக் கொள்ள அறிவித்த சிறப்புக் கவன ஈர்ப்பை நேரமின்மை கருதி மறுநாள் எடுத்துக் கொள்ளுதல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதிக்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரு வேண்டுகோள். நேற்றையதினம் மின்சார வாரியத்தில் நிறைய பேர் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கும் நிறைய பேர் பேச இருக்கின்றார்கள். பிறகு அமைச்சருடைய பதிலுரை இருக்கிறது. ஆகவே, தயவுசெய்து இந்தப் பொருளை நாளையதினம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு)